

# பால்நிலையும் சுனாமியும்

சாமிலா அற்றனபொல
காதரின் புரூன்
ரன்கில்ட் லூண்ட்

சமூக விஞ்ஞானிகள் சங்கம்

# பால்நிலையும் சுனாமியும்

பால்நிலை பற்றிய அறிவு எவ்வாறு
ஒரு நிறுவனத்தில் பரவுகிறது என்பது குறித்த ஆய்வு

சாமிலா அற்றனபொல, காதரின் புரூன், ரன்கில்ட் லுாண்ட்
[பலவந்த குடியகல்வு பற்றிய NTNU ஆய்வுக்குழு]

சமூக விஞ்ஞானிகள் சங்கம் (SSA)
2010

Paalnilaiyum Sunamiyum
(Gender and Post-tsunami Recovery)
by Chamila Attanpola, Cathrine Brun & Ragnhild Lund

Published by : Social Scientist's Association
12, Sulaiman Terrace,
Colombo - 05, Sri Lanka.

Printed by: Kumaran Press (Pvt) Ltd, B 3 - G 3, Ramya Place, Colombo - 10.

தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் நிலையம் -
பட்டியலாக்க வெளியீட்டுப் பிரிவு

அற்றனபொல, சமீலா
பால்நிலையும் சுனாமியும் / சமீலா அற்றனபொல சக புருன் காதரின், வான்ட் ரன்கில்ட் மொழிபெயர்ப்பாளர்: சா. திரிவேணி சங்கமம்.- கொழும்பு : சமூக விஞ்ஞானிகள் சங்கம், 2010
ப.- 19 ; ச. மீ. 23
ISBN 978-955-1772-80-2
i. 303.4850829493 டிவி 22 ii. தலைப்பு
1. சுனாமி

சாமிலா அற்றனபொல தற்போது NTNU கோளமயமாக்கல் நிகழ்ச்சி திட்டத்தில் இணைப்பாளராக பணிபுரிகிறார். அவரின் அண்மைய வெளியீட்டின் தலைப்பு 'சுகாதாரத்தை மேம்படுத்துவதற்காக பெண்களை வலுவூட்டல்: கட்டுநாயக்க ஏற்றுமதி செயல்பாட்டு வலையத்தில் குடியகல்வும் பெண் தொழிலாளர்களின் கதைகளும்' (2008).

காதரின் புருன் தொழில்நுட்பம், விஞ்ஞானத்துக்கான நோர்வே பல்கலைக்கழகத்தின் புவியியல் துறையில் இணைப்பேராசிரியராக உள்ளார். 'ஓர் இடத்தை கண்டடைதல்: இலங்கையில் உள்ளூர் ஒன்றிணைவும், நீடிக்கப்பட்ட இடம் பெயர்வும்' (SSA 2008), 'காலனித்துவத்துக்கு பின் இலங்கையில் பண்பாடும் புவியியலும்' (With Traiq Jazeel, Sage, 2008) என்பவை அவரது அண்மைய வெளியீடுகள்.

ரன்கில்ட் லுண்ட விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் ஆகியவற்றுக்கான நோர்வேஜியன் பல்கலைக்கழகத்தில் அபிவிருத்தி ஆய்வு / புவியல்துறைகளில் பேராசிரியராக உள்ளார். 'இலங்கையில் 2004 சுனாமி பாதிப்பும் கோட்பாடும்' என்பது உள்ளிட்ட பல வெளியீடுகளை செய்துள்ளார்.

# பால்நிலையும் சுனாமியும்

**பால்நிலை பற்றிய அறிவு எவ்வாறு**
**ஒரு நிறுவனத்தில் பரவுகிறது என்பது குறித்த ஆய்வு**

**பால் நிலையும் சுனாமியும்**

இந்த ஆய்வின் நோக்கத்தை முதலில் எடுத்துக் கூறவேண்டும். பெண்கள் சுனாமித்தாக்கத்தின் போது பால்நிலை சார்ந்த பிரச்சினைகளை எதிர்நோக்கினர். இப்பிரச்சினைகளை 'Gender Specific Problems' என்று ஆங்கிலத்தில் கூறுவர் (தமிழில் 'பால்நிலைசார் பிரச்சினைகள்'). சமூகத்தில் பெண்கள் அந்தஸ்தில் தாழ்ந்தவர்களாய் உள்ளனர். இதனால்தான் சுனாமித் தாக்கத்தின் போது அவர்களது பிரச்சினைகள் அதிகரித்தன. ஆண்களை விடக் கூடிய பெண்கள் சுனாமியால் இறந்தனர். பெண்கள் குடும்ப வன்முறைக்கு ஆளாயினர். இவை எதனை எடுத்துக்காட்டுகிறது என்று பாருங்கள். உள்ளூர் அரசியல், பண்பாடு, பொருளாதாரம் என்ற நிலைகளில் பெண்களின் அந்தஸ்து எவ்வாறு நிர்ணயிக்கப்படுகிறதோ அதன்படிதான் அவர்கள் மீதான பாதிப்பும் உள்ளது என்பது தெளிவாகும். மீள்கட்டுமான நடவடிக்கைகள் தொடர்பான உள்ளூர் நிர்வாகக் கட்டமைப்பில் பெண்களுக்கு இடம் இல்லை; அவர்களின் ஆலோசனைகள் பெறப்படுவதும் இல்லை. குடிசைக் கைத்தொழில், மீன்பதனிடல் போன்ற பல தொழில்கள் சுனாமியால் பாதிக்கப்பட்டன. இவை அழிந்தன. எந்தத் தொழில்கள் அழிந்தனவோ அவற்றில் தான் பெண்கள் ஈடுபட்டிருந்தார்கள். இதனால் மறுவாழ்வு என்பதும் பெண்களுக்கு பிரச்சினை ஆயிற்று. ஆயினும் கணிசமான பெண்கள் சங்கங்களை அமைத்து நன்மைகளும் வலுவூட்டலும் பெற்றுள்ளனர். சிலர் தன்னார்வ தொண்டு நிறுவனத்தில் பங்காளிகளாகவும் ஆகியுள்ளனர். சுனாமிக்கு பின்னரான மீள்கட்

டமைப்பு பணிகளுக்கு தேவையான நிதியைப் பெற்றுக் கொள்வதிலும் அவர்கள் வெற்றியடைந்துள்ளனர்.

அடுத்ததாக இந்த ஆய்வின் இன்னோர் விடயத்தையும் குறிப்பிட விரும்புகிறோம். வடக்கின் NGO ஒன்று (A Northern NGO) சுனாமிக்குப் பின்னரான மறுவாழ்வு நடவடிக்கையில் ஈடுபட்டது. இந்த NGO இலங்கையில் 1980க்கள் முதல் செயற்பட்டது. இந்த அமைப்பு வறுமையை ஒழித்தல், நீதியான சமூகத்தை கட்டியெழுப்புதல் என்ற இலக்குகளை மக்களை ஒன்று திரட்டி ஐக்கியப்படுத்துவதன் மூலம் அடைய முனைகிறது. சமுதாய அபிவிருத்தி (Community Development) மனிதாய உதவி (Humanitarian Assistance) என்பவை மூலம் தனது இலக்குகளை அடைவதற்கு வடக்கு NGO விரும்புகிறது. எங்களது நோக்கம் இந்த நிறுவனத்தினதும் உள்ளூர் பெண்கள் நிறுவனத்தினதும் (இனிமேல் CBO என அழைக்கப்படும்). பால் வேறுபாட்டு தந்திரோபாயத்துக்கு ஓர் அறிமுகத்தை தருவதாகும். இதைவிட இந்த NGOவின் பல்வேறு மட்டங்களிலும் CBOவுக் கிடையேயும் பால் வேறுபாடு பற்றிய அறிவு பயணிக்கும் வழிகளைப்பற்றி நாங்கள் கலந்துரையாடுகிறோம். எங்கள் ஆய்வில் பெற்ற படிப்பினைகளை இந்தப் பிரதியில் நாங்கள் பிரதிபலிக்கிறோம். உத்தேசமாக, எதிர் காலத்தில் இந்த நிறுவனத்தின் பால் வேறுபாட்டு அபிவிருத்தியை எவ்வாறு மீள்சிந்தனை செய்வது என்பது பற்றியும் எவ்வாறு ஒருங் கிணைந்து வேலை செய்வது என்பது பற்றியும் கூறியுள்ளோம். இந்த நிறுவனத்தோடு நெருங்கி ஒத்துழைத்திருந்தபோது அதன் கள உத்தியோகத்தர்கள், மற்றும் CBO உறுப்பினர்களிடமிருந்து பெற்றுக் கொண்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு இப்பகுப்பாய்வு செய்யப்பட்டது. எங்களது ஒத்துழைப்பு ஒக் 2004 - மார்ச் 2008க்கு மிடையே இடம் பெற்றது.

### சுனாமிக்கு பின்னர் எழுந்துள்ள நிறுவன சவால்கள்

டிசம்பர் 2004ல் இலங்கை கடற்கரைகளை சுனாமி தாக்கியபோது மனிதாபிமானப் பணியாளர்கள், சர்வதேச நிபுணர்கள், மற்றும் ஊடகவியலாளர்கள் அடங்கிய குழு நாலாவது அலையாக அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவும் பொருட்டாக

வந்திறங்கியது. இந்த வெளியார்கள் தங்கள் சொந்த நிகழ்ச்சி நிரலுடனும், அறிவுடனும், வேறுபடும் உலகப் பார்வைகளுடனும் வந்திறங்கினர். வாழ்வும் வாழ்வாதாரமும் பாதிக்கப்பட்டிருந்த உள்ளூர் சமூகத்தில் புனர்வாழ்வு மிக விரைவாக செய்யப்பட வேண்டும் என்று விவாதிக்கப்பட்டிருந்த நேரம் அது. அதனால் கூடிய உதவிகளை உள்ளூர் அறிவு நடைமுறைகளுக்கு அமைவாக செய்யமுடியவில்லை. மக்கள் தங்கள் நல்வாழ்வை 'மீண்டும் கட்டியெழுப்பல்' என்னும் செயல்பாடு பற்றி சிந்திக்க போதிய அவகாசம் இருக்கவில்லை.

இருந்த போதிலும் நாட்டில் பல வருடங்களாக இயங்கிவந்த சில சர்வதேச நிறுவனங்கள் தங்கள் வலைப்பின்னல் வேலைகளில் உள்ளூர் அறிவையும் நடைமுறையையும் உட்படுத்தியிருந்தன. அதற்கேற்ற உத்தியோகத்தர்களையும் அவைகள் கொண்டிருந்தன. ஆயினும் அந்நிறுவனங்கள் கூட சில புதிய சவால்களை எதிர் கொள்ள நேரிட்டது. அந்நிறுவனங்களின் அபிவிருத்தி செயலாளிகளும் கொள்கை வகுப்பாளர்களும் ஒரு பொருத்தமான நடைமுறையை உருவாக்க சிரமப்பட்டனர். சில நிறுவனங்கள் சீர்திருந்திய நடைமுறைகளை உருவாக்க முயற்சித்தன. ஆனால் அவைகளால் உள்ளூர் சமூகத்துக்கு வில்லங்கங்களே விளைந்தன. வடக்கு NGO ஏற்கெனவே தன் வழியில் மைய நீரோட்ட வேலையையும் சீர்திருந்திய பால்வேறுபாட்டு தந்திரோபாயத்தையும் முன்னெடுத் திருந்தது.

## பங்காளி உறவில் பால்நிலை மைய நீரோட்டமும் அறிவுபரிமாற்றமும் ஆற்றல் மேம்பாடும்

பங்காளி உறவு (Partnership), பால்நிலை மைய நீரோட்டம் (Gender Main Streaming), அறிவின் பரிமாற்றம் (Knowledge Transfer), ஆற்றல் மேம்பாடு (Capacity Building) ஆகிய கருத்தாக்கங்களை இவ்விடத்தில் அறிமுகம் செய்கிறோம். மனிதாய அபிவிருத்தி நடவடிக்கைகளில் இன்று அறிவின் பரிமாற்றம், ஆற்றல் மேம்பாடு என்ற இரு விடயங்களும் முக்கிய கவனத்தைப் பெறுகின்றன. நிதிவளங்களை NGOக்கள் மூலம் பங்கிடுவது, பரிமாற்றம் செய்வது என்பதோடு அறிவின் பரிமாற்றமும் இங்கே நிகழ்கிறது. அறிவின் பரிமாற்றத் திற்கும் அதன் விளைவால் நிகழும் ஆற்றல் மேம்பாட்டிற்கும் இன்

னோர் விடயம் முக்கியமாகும். இதனை பங்காளி நிகழ்ச்சி நிரல் (Partnership - Agenda) என்று கூறுவர். வடக்கு NGOவிடம் இருந்து அதன் பங்காளர்களான (Partners) சிபிஓக்களிற்கு அறிவு பரிமாற்றம் செய்யப்படுகிறது. அடுத்ததாக உள்ளூர் உடைமை (Local Ownership) என்பது முக்கியம். அபிவிருத்தி திட்டத்தை தொடக்கி விட்டுப் போகலாம். அதை மக்கள் பொறுப்பேற்று பராமரிக்க வேண்டும்; நடத்த வேண்டும். இதனையே 'உடைமை' (Owner Ship) என்ற கருத்தால் விளங்கிக் கொள்கிறோம். உடைமை, பங்காளி உறவால் வலுப்படுத்தப்படும். சர்வதேச உதவித் திட்டங்களில் உள்ளூர் உடைமை, பங்காளி உறவு என்பன முக்கியம். 1995இல் பீஜிங் மாநாடு நடைபெற்றது. அப்போது பால்நிலை மைய நீரோட்டம் (Gender Main Streaning) என்ற கருத்து உலகின் கவனத்தை ஈர்த்தது.

பால்நிலை மைய நீரோட்டம் என்பதன் கருத்தாவது தீர்மானம் எடுக்கும் அம்சங்களில் எல்லாம் பெண்களையும் பால் வேறு பாட்டையும் ஒன்றிணைத்தலும் ஒரு நிறுவனத்தின் எல்லா மட்டங் களிலும் அதனை பிரயோகித்தலுமாகும். அறிவு, செயல்திறன், கட்டியெழுப்பல் என்பன தொடர்பிலே சர்வதேசம் மற்றும் உள்ளூர் நிகழ்ச்சி நிரலை எவ்வாறு ஒன்றிணைப்பது என்பதை விளங்கிக் கொள்ளல், பால் வேறுபாடு என்றால் என்ன என்பதை அறிந்து கொள்ளல் என்பதாகும். மேலும் ஆண்களுக்கும் பெண்களுக்குமான மேம்பட்ட நிபந்தனைகளை எவ்வாறு அடைவது என்பதையும் இது கருத்தில் கொள்கிறது. நாங்கள் இங்கே அக்கறைப்படுவது இதுவாகும். இங்கே நாங்கள் அறிவையும் பால்வேறுபாட்டையும் உற்று நோக்கி அதன் மைய நீரோட்டம் எவ்வாறு இடம் பெறுகிறது என்பதை ஆராய்கிறோம். மேலும் பங்காளி நிறுவனத்திலும் பிரதான அலுவலகத்தின் பல மட்டங்களிலும் கள அலுவலகத்திலும் அது (பால்வேறுபாடு) எவ்வாறு பின்பற்றப்படுகிறது என்பதையும் கவனத் தில் கொள்கிறோம்.

பால்வேறுபாட்டுமைய நீரோட்டம் ஒரு புதிர் என்றும் அது நன்கொடையாளர்களால் வழிநடத்தப்படுவது, அதிகாரிமுறைமை யைக் கொண்டது என்றும் பெண்களின் அந்தஸ்தை மாற்றுவதைக் காட்டிலும் வெறும் செயல்பாடுகளில் அக்கறை கொண்டது என்றும் விமர்சிக்கப்படுகிறது. இந்த விமர்சனத்தை கவனத்தில் கொள்வது

முக்கியமானது. மைய நீரோட்டத்தின் விளைவால் மாற்றத்துக்கான ஆற்றல் இழக்கப்படலாம். ஆயினும் பல நிறுவனங்கள் இன்னும் மைய நீரோட்ட முறைமையை பால்வேறுபாட்டு வேலைகளுக்கு பயன்படுத்துகின்றன. நாங்கள் கூடுதலாக அறிய வேண்டியது என்ன வென்றால் பால்வேறுபாடு பற்றிய அறிவு ஒரு நிறுவனத்தின் பலதளங்களுக்கிடையேயும் தரங்களுக்கிடையேயும் எவ்வாறு பயணிக்கிறது என்பதாகும். இதன் மூலம் பால் வேறுபாட்டு வலுவூட்டலை சாதிக்க முடியும். அறிவைப் பரப்ப ஒரு பொதுவான நடைமுறை பயிற்சி பட்டறைகளை உத்தியோகத்தினரிடையே நடத்துவதாகும். அதனால் அறிவு மாறாமலும் நேராகவும் ஒரு செயலாளியிலிருந்த மற்றொரு செயலாளிக்கு செல்லுவதாக கருதப்படுகிறது. ஆயினும் அது மாறாமல் பரிவர்த்தனை செய்யப் படுவதில்லை. ஒரு நிறுவனத்தின் நாளாந்த செயற்பாடுகள் ஊடாகவும் வளவாளர்களின் பரப்புரை செயல்பாடுகள் ஊடாகவும் பெற்றுக் கொள்ளப்படும் தகவல் அங்கே உள்ள பல மனிதர்களிடம் வருகிறது.

அந்த தகவலை அவர்கள் தம் வழியில் புரிந்து, தகவமைத்து, நெறிப்படுத்தி, மீளமைத்துக் கொள்கின்றனர். முன்னைய அநுபவம், செயல்பாடு, ஆகியவற்றில் அடிப்படையில் உருவாகும் அறிவை தழுவியே புதிய அறிவும் கட்டமைப்பாகிறது. ஆகவே நாங்கள் அந்த நிறுவனத்தின் பல்வேறு மட்டங்களில் உள்ள அறிவு கொண்ட மனிதர்களிடையே நிலவும் உறவை விளங்கிக் கொள்வது அவசிய மானது. இதனால் அறிவு எவ்வாறு உருவாகி பாவனைக்கு வருகிறது எவ்வாறு தகவமைக்கப்படுகிறது என்பவைகளை அறிந்து கொள்ளலாம்.

### சிபிஸ: ஓர் உள்ளூர் பெண்களின் நிறுவனம்

நாங்கள் வேலை செய்யும் பங்காளி நிறுவனம் ஒரு பெண்கள் சங்க மாகும். தென்னிலங்கையில் உள்ள ஒரு கிராமத்தின் கயிறு திரிக்கும் பெண் தொழிலாளர்களின் நலனை இது கவனித்துக் கொள்கிறது. நாற்பது உறுப்பினர்களுடன் இந்த நிறுவனம் 2000ம் ஆண்டில் உருவாக்கப்பட்டது. இலங்கையின் கரையோர கிராமங்களை சுனாமி

தாக்கிய போது இச்சங்கத்தின் உறுப்பினர்கள் தொகை தொண்ணூறாக உயர்ந்தது. உறுப்பினர் அனைவரும் மீனவரின் மனைவிமாராவர். 2006ல் உறுப்பினர் தொகை 169 ஆக இருமடங்காக அதிகரித்தது. எல்லாரும் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்கள். இந்த நிறுவனத்தால் வழங்கப்படும் நிதி, பொருள் உதவிகளே இந்த உறுப்பினர் தொகை அதிகரிப்புக்கு காரணமாகும். சங்கத்தில் சேர்ந்து கொள்ள மற்ற பெண்களிடமிருந்து அதிகரித்த அழுத்தம் ஏற்பட்ட போதிலும் புதிய உறுப்பினர்களை சேர்த்துக் கொள்வது கட்டுப்படுத்தப்பட்டது. அதனால் நிதிப் பங்கீடு குறையும் எனக் கருதப்பட்டது.

> எங்களது உறுப்பினர்கள் எல்லாம் புதிய உறுப்பினர்களை சேர்ப்பதில்லை என்று முடிவெடுத்தோம். உறுப்பினர் தொகை அதிகரிப்பு இருக்கின்ற உறுப்பினர்களுக்கு நன்மையை தராது. ஆயினும் இந்த கிராமத்தில் உள்ள ஏழை குடும்பங்களுக்கு உதவுங்கள் என்று நாங்கள் மற்ற நிறுவனங்களைக் கேட்டுக் கொண்டோம்.

CBO குழு நிதி வழங்கும் நிறுவனங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தியது. கிராமக் கோயில், சிறிய ஒழுங்கை என்பனவற்றை புனரமைக்க சிரமதானத்தை (சமூக தொண்டு வேலை) ஒழுங்குபடுத்தியது. மேலும் சமூக மண்டபம், பாதை போன்றவற்றை நிர்மாணிப்பதிலும் பங்கு பற்றியது. இதனால் CBO செயல்திறமுடையதென்றும் வெற்றிகரமான செயல்களை புரிகிறதென்றும் சொல்லப்பட்டது.

முதலாவதாக எஞ்சி இருக்கும் விபரிப்பில் நாங்கள் மனம் கொள்ள வேண்டிய பிரச்சினைகள் இரண்டாகும். இரண்டாவதாக CBO திட்டத்தில் பால்வேறுபாட்டின் வகிபாகம். உதவி தேவைப்பட்டவர்கள் நிறுவனத்தில் உறுப்பினராவதை தடுப்பதால் சாத்தியமான அளவு உதவிகளை செய்ய இயலாமல் போகிறது. உதவிகளை உள்ளூர் நிறுவனம் ஊடாகவே வழங்க முடியும். இதனால் CBO போன்ற உள்ளூர் நலன்களை கவனிக்கும் நிறுவனங்கள் மொத்த சமூகத்தையும் பிரதிபலிக்க இயலாமல் போகிறது. தங்களின் உறுப்பினர்களின் நலன்களைத்தான் அவைகளால் கவனிக்க முடிகிறது.

வடக்கு NGO: பால் நிலை தந்திரோபாயமொன்றின் அபிவிருத்தி

பால்வேறுபாடு தொடர்பில் இந்த NGO வின் பிரதான அலுவலகத் துக்கும் கள அலுவலகத்தக்குமிடையே புவியியல் பண்பாட்டு இடைவெளி காணப்படுகிறது. இந்த NGO வின் அமைப்பாக்கத்தின் வழியில் இந்த இடைவெளி அமைந்தள்ளது. பிரதான அலுவலகத்தில் பல்வேறு உத்தியோகத்தர்கள் இருப்பதால் அவர்களின் கூட்டு ஒரு அறிவு களஞ்சியம் எனக் கருதப்படுகிறது. இங்கே நன்கொடையாளர் களுக்கு ஏற்ற மொழி பேசப்படுவதால் அவர்கள் மீள்கட்டமைப்பு, வாழ்வாதாரம், பால்வேறுபாடு சார்ந்த நிறுவனத்தின் உத்தியோக பூர்வ சொல்லாடலை கட்டமைப்பதற்கு வழிகாட்டுகின்றனர். அறிவு சுற்றி சுழன்று பிரதான அலுவலகத்தில் திரள்கிறது. அபிவிருத்தி, மீளமைப்பு வேலையின் நாடுகடந்த அல்லது பூகோள சொல்லாடலாக இதனைக் கொள்ள முடியும். கள அலுவலகங்களுடன் பன்முகப்பட்ட நிறுவனமாக இது இருந்த போதிலும் இதன் உத்தியோகத்தர்களுக்கு நிபுணர்கள் என்ற வகையில் பணிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. அவர்கள் நிறுனத்தின் பொதுவான நிகழ்ச்சி நிரலை நிர்ணயிக்கின்றனர்.

ஒரே மாதிரி NGO வின் பால் வேறுபாட்டு தந்திரோபாயத்துடனான வேலை பிரதான அலுவலகத்தில் இடம் பெற்றது. இந்த வேலையின் முக்கிய பகுதி பால்வேறுபாடு பற்றிய கைநூல் ஒன்றை நிறுவனத்தின் எல்லாமட்டங்களிலும் உபயோகிப்பதற்காக தயாரிப்பதாகும். பால் வேறுபாட்டு அபிவிருத்தி நோக்கு என்று அழைக்கப்படும் அணுகு முறையின் அடிப்படையில் இந்த கை நூல் அமைந்துள்ளது. இந்த அணுகுமுறை பால்வேறுபாடு சமூக ரீதியாக கட்டமைக்கப்பட்டது என்ற பார்வையுடையது. மேலும் இது ஆணுக்கும் பெண்ணுக்குமிடை யிலான சமூக உறவில் கவனம் கொள்கிறது. பிரதான அலுவலகத்தின் பார்வையின்படி தந்திரோபாய பால்வேறுபாட்டு தேவைகளையும் அதன் மைய நீரோட்டத்தையும் நிறுவனம் கொண்டிருத்தல் அந்த நிறுவனம் அந்த நோக்குடன் வேலை செய்வதற்கு அவசியமாகும். பெண்களால் அடையாளம் கண்ட தந்திரோபாய பால்வேறுபாட்டு தேவைகள் அவர்களின் தாழ்நிலையை மேவ உதவுவனவாக உள்ளன. இந்த தேவைகள் சட்ட உரிமைகள், சமஊதியம் மற்றும் பெண்களின் உற்பத்தி உரிமைகளுடன் இணைந்தவையாகும். நிறுவனத்தின் பால்

வேறுபாட்டு தந்திரோபாயத்தை அமுல்படுத்துவதற்கு அதற்கான உத்தியோகத்தர்களுக்கு சில பயிற்சிப்பட்டறைகள் நடத்தப்பட்டுள்ளன. அவைகளையும் விட இத்தகைய நூல், நிறுவனத்தின் பால்வேறுபாட்டு பணி சார்ந்த அறிவை பரப்ப முக்கியமாக பயன்பட்டது. நிறுவனத்தின் மற்ற தரங்களுக்கிடையே என்ன நடந்துள்ளது என்பதுடன் பால் வேறுபாட்டை விளங்கிக் கொள்ளல் எவ்வாறு ஒத்திசைக்கிறது என்பதையும் கவனித்தல் வேண்டும்.

### பால்நிலை தொடர்பாக வேலை செய்யும் களப்பணியாளர்கள்

களப்பணி என்ற சொல் சுட்டிக் காட்டுவது போல் இந்த NGO வின் களப்பணியாளர்கள் திட்டங்கள் அமுல்படுத்தப்படும் இடங்களில் நெருக்கமாக உள்ளனர். இதனால் அவர்கள் திட்டங்களை நடை முறைப்படுத்தும் பொறிமுறை பற்றி கூடிய அறிவுள்ளவர்களாக இருக்கின்றனர். ஆயினும் அவர்கள் நிறுவனத்தின் பால்வேறு பாட்டு தந்திரோபாயத்தை உருவாக்குவதில் கூடிய பங்கு வகிக்கவில்லை. பால்வேறுபாடு பற்றி கூடுதலாக விளங்கிக் கொள்வதால் அவர்களிட மிருந்து பிரதான அலுவலகம் அதிகம் அறிந்து கொள்ள முடிவ தில்லை.

தங்களின் அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலுக்குள் பால்வேறுபாட்டை தகவமைத்துக் கொண்டு அது எப்படி இருக்க வேண்டும், எவ்வாறு பரப்பப்பட வேண்டும் என்ற தங்களின் சொந்தக் கருத்துக்களையும் களப்பணியாளர்கள் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் பால்வேறுபாட்டு விழிப்புணர்வு இயக்கங்களையும் ஆரம்பித்துள்ளனர். ஐந்து கிராமங் களில் கருத்தரங்குகளை நடத்தியுள்ளனர். அவர்கள் அவைகளில் பால்வேறுபாடு என்ற சொல்லை தங்கள் கருத்தரங்கு தலைப்புகளாக உபயோகிக்கவில்லை. ஏனென்றால் மக்கள் ஆண்களை விட பெண் களுக்கு கூடுதலான அதிகாரத்தை கொடுப்பது என்று அதனை விளங்கிக் கொள்வார்கள் (சிங்களத்தில் பால் வேறுபாடு என்றால் ஆண்தன்மை யும் பெண்தன்மையும் சமூக ரீதியாக கட்டமைக்கப்பட்டது என்று வரையறுக்கப் பட்டுள்ளது. இது ஒப்பீட்டளவில் புதிய சொல்லாகும். எனவே இதைவிடுத்து சமூகத்திலும் குடும்பத்திலும் பெண்களினதும் ஆண்களினதும் பொறுப்புகள் போன்ற தலைப்புகள் தேர்ந்தெடுக்















கப்பட்டன. கிராமத்தவர்கள் இந்த கருத்தரங்குகளில் அதிகம் கலந்து கொண்டனர். ஆயினும் இந்த பால் வேறுபாட்டு விழிப்புணர்வு கருத்தரங்குகளின் பொறுப்புகளை அறிந்து கொள்வதற்கான தொடர் கருத்தரங்குகள் நடத்தப்படவில்லை.

பிரதான அலவலகத்தின் நோக்கு அலுவலகத்தின் களநோக்கி லிருந்து வேறுபடுகிறது. பிரதான அலுவலகத்தினர் ஆண்களுக்கும் பெண்களுக்குமிடையே மாறிவருகின்ற உறவு பற்றி குறைந்த அக்கறையே கொண்டுள்ளனர். நுண்கடனை வழங்கி குடும்பத்தினரின் வருமானத்தை அதிகரிப்பதிலேயே அவர்கள் கூடிய அக்கறை கொண்டுள்ளனர். கள உத்தியோகத்தர்களின் பால்வேறுபாடு பற்றிய நோக்கு அபிவிருத்தியில் பெண்கள் (WID) நோக்கோடு இசைந்தது. பொதுவான பெண்ணியப் புலமையும் இந்த கை நூலும் அபிவிருத்தியில் பெண்கள் நோக்கை ஆண்களின் சாத்தியங்களை ஏன் பெண்கள் பெறுவதில்லை என்பதற்கான காரணங்களையே அவர்களின் உற்பத்தி செயல்பாடுகளுடன் அவைகள் கொண்டுள்ள அநுபவரீதியான தொடர்புகளையோ அறிந்து கொள்ளாத நோக்கு என்று விமர்சித் துள்ளனர். இவ்வாறான தந்திரோபாயம் அபிவிருத்தி செயல்பாடுகளில் பெண்களை உட்படுத்தி அவர்களுக்கு மேலதிக சுமையை வழங்கு கிறதே அல்லாமல் அவர்களின் வலுவூட்டலை நோக்கி நகர்த்த வில்லை.

### பால் நிலையும் CBOவின் பணியும்

உள்ளூர் பெண்கள் நிறுவனம் நிறுவப்பட்டதிலிருந்து அதனுடைய தலைவர்கள் தங்கள் கிராமத்துக்கு எது சிறப்பாகத் தேவைப்படுகிறது என்பதைத் தேர்ந்தெடுத்தனர். தனிப்பட்ட உறுப்பினர்களுக்கு எது சிறந்தது என்பதையும் கருத்தில் கொண்டனர். அவர்கள் விளங்கிக் கொண்டுள்ளபடி அபிவிருத்தி என்பது அவர்களின் சமூக வாழ்க்கைத் தரத்தை விருத்தி செய்து கொள்ளுதலாகும்.

> எங்கள் பொறுப்புகள், பணிகள் மற்றும் ஆண்களும் பெண்களும் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பவற்றை பால்வேறுபாடு வரையறை செய்கிறது. பெண்களின் பாத்திரம் தாய் ஆவதாகும். ஆண்களின் பொறுப்பு தந்தையாகி குடும்பத்தை காத்தலாகும்.

> ஆண்கள் மாத்திரம் குடும்பத்தை தாங்கிப்பிடிக்க முடியாது. பெண்களாகிய நாங்களும் வருமானத்தை அதிகரிக்க ஏதாவது செய்ய வேண்டும். இவ்வாறில்லாவிட்டால் பிழைக்க முடியாது (சிபிஒவின் தலைவர், யூலை 2007).

கள அலுவலகம் ஒழுங்கு செய்த பயிற்சி பட்டறைகளில் CBO கலந்து கொண்டது. அவைகளில் ஒன்று பால் வேறுபாடு பற்றி கிழக்கு உனகுறுவாவில் நடந்தது. அதில் பல கிராமத்தவர்கள் கலந்து கொண்டனர். ஆயினும் பங்கு பற்றியவர்களின் பால்வேறுபாடு பற்றிய புரிதல் நிலை பெற்றுள்ள கருத்துக்கு அமைவாகவே இருந்தது. ஆயினும் ஆண்களும் பெண்களும் குடும்ப விருத்திக்கு உதவுதல் வேண்டும் என்பதை ஏற்றுக் கொண்டனர். தனித்தனியாக வேலை செய்வதைக் காட்டிலும் கூடி வேலை செய்தால் கூடிய அளவு பெறமுடியும் என்று CBO வில் உள்ள பெண்கள் கூறினார்கள். சமூக அபிவிருத்தி செயல்பாட்டில் பெண்கள் கூடிய நேரத்தை செலவிட்டாலும் அவர்கள் குடும்பத்தையும் கவனித்துக் கொள்கின்றனர். இந்தக் கிராமத்தில் பெண்கள் வலுவூட்டல் பெறுவதற்கு CBOவின் ஊடாக வேலை செய்வதும் ஒரு வழியாகும். இதன் மூலம் கிராமத்துக்கு அதிக வளத்தை கொண்டு வரலாம்.

**எவ்வாறு அறிவுபயணம் செய்கிறது நிறுவனத்தின் பலமட்டங்களிடையேயுள்ள உறவு**

> மக்களை வலுப்படுத்துவதும் அபிவிருத்தியும் எங்களின் பிரதான நோக்கமாகும். ஆகவே நாங்கள் CBO வின் அபிவிருத்தி மீது கவனம் செலுத்துகிறோம். அது உறுப்பினர்களுக்கு உதவுகிறது. எங்களது செயல்பாடுகள் ஊடாக நிலை பேறான அபிவிருத்தியைப் பெற்றுக் கொள்ள நாங்கள் முயல்கிறோம். அதே நேரம் அதிக NGOகள் குறுகிய கால நோக்கத்தை கொண்டுள்ளன. பங்குடமை அபிவிருத்தி திட்டத்துக்குள் ஒரு தரத்திலிருந்து மறுதரத்துக்கு அறிவும் கருத்துகளும் இலகுவாக பயணம் செய்ய வேண்டும் என்பதில்லை.

NGO பங்காளி பங்குடமை உறவு பல சாதகமான விளைவுகளை தனிமனித மட்டத்திலும் சமூக மட்டத்திலும் கிராமத்திற்கு வழங்கி

யுள்ளது. CBO செயல்பாட்டில் பங்கு கொள்ளும் பெண்கள் முக்கியமான மாற்றங்களை தங்கள் வாழ்க்கையில் அடைந்துள்ளார்கள். சிறப்பாக அவர்களின் பங்களிப்பால் குடும்ப வருமானம் உயர்வதால் அவர்களின் மதிப்பும் உயர்ந்துள்ளது. நிறுவன உறுப்பினர்களின் வாழ்க்கை தரமும் உயர்கிறது. இதைவிட பால்வேறுபாடு பற்றிய நோக்கங்கள் நிறை வேற்றப்பட வேண்டியுள்ளது. இதைத்தான் இந்த NGOவின் கள அலுவலக மட்டத்துக்கு சொல்ல முடியும்.

இந்த பால் வேறுபாட்டு கொள்கை தொடர்பில் NGO - CBO உறவு வரையறுக்கப்பட்டுள்ளது ஓர் ஆர்வமுள்ள அம்சமாகும். சர்வதேச உதவியின் பிரத்தியேக விளைவு பால் வேறுபாட்டு உறவுகளின் மாற்றமாகும். கிராமத்து பெண்கள் மீது குவிக்கப்பட்டுள்ள கவனம் மாறி சுனாமி மற்றும் குடும்ப வேலையின் மீது திரும்பியுள்ளதும் அதன் விளைவாகும். இந்த பால் வேறுபாட்டு தந்திரோபாயத்தில் அமைந்துள்ள அமைப்புசார் நிபந்தனைகள் ஆண்களுக்கும் பெண் களுக்குமான சமத்துவத்தை மட்டுப்படுத்துகிறது. இதனால் தந்திரோபாய பால்வேறுபாடு வலியுறுத்தப்படுதல் அவசியமானது.

NGO வின் பிரதான அலுவலகத்திலிருந்து கருத்துக்களும் திட்டங்களும் கோரிக்கைகளும் கள அலுவலகமூடாக CBO வுக்கு வருகின்றன. CBO வின் வேலைகளில் பால்வேறுபாடு மீளவும் வெளிப்படுகின்ற போது NGO வின் தலைமை அலுவலகம் எண்ணி யிருந்ததற்கு மாறாக அது அமைகிறது. முடிவாக பெண்களுக்கான ஒரு முயற்சியாக CBO வை சொல்லலாம். அது கிராமத்தில் பெண் களுக்காக பெண்களால் தொடங்கப்பட்ட முயற்சியாகும். உள்ளூர் அதிகார உறவு சுனாமி திட்டங்களில் நிதி உதவி பெறும் வாய்ப்புகளை அதற்கு வழங்கியுள்ளது. அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலுடன் CBO - NGO உறவு எவ்வாறு கருத்துகள் நிறுவனத்தின் உயர்தளத்தில் இருந்து கள அலுவலகத்துக்கும் பங்காளிக்கும் கசிகிறது என்ற ஐயத்தை எழுப்பு கிறது. கடைசியாக இந்த இறக்குமதி அறிவு எவ்வாறு பரிவர்த்தனையாகி CBO வின் உட்கிடையாகிறது. இது ஆரம்பத்தில் உள்ளதை விட வித்தியாசமாக இருக்கும்.

பால்வேறுபாட்டை விளங்கிக் கொள்வதற்கு அறிவு பரிவர் த்தனையை விட முக்கியமான விடயம் நிறுவனத்தின் எல்லா மட்டங் களிலும் அது எவ்வாறு பெறப்படுகின்றது என்பதை அறிவதாகும்.

மேலும் அது மக்கள் வாழ்க்கை அநுபவம், கிராமம், கள அலுவலகம், தலைமை அலுவலகம் என்பவற்றின் ஊடாகவும் CBOவின் ஊடாகவும் என்ன வழியில் கட்டமைக்கப்படுகின்றது என்பதையும் விளங்கிக் கொள்வதாகும். இவ்வாறு பால்வேறுபாடு பற்றிய அறிவு பெறப்படும் போது எல்லா செயலாளிகளும் சுதந்திரமானவர்களாக தெரிவர். அவர்கள் தங்கள் சொந்த நிகழ்ச்சி நிரலையும் ஈடுபாட்டையும் கைக்கொள்வர். இதனால் பால்வேறுபாட்டு உறவை மாற்றுவதற்கு மட்டுப்படுத்தப்பட்ட ஆற்றலே கிடைக்கும். இது ஒரு சவாலாகும்.

உள்ளூர் சமூகத்தில் புதிய பிரிவுகள் உருவாக்கப்பட்டுள்ளது என்பது எவ்வாறு தெளிவாகிறது. அந்த பிரிவுகள் நிறுவனத்தில் உறுப்பினராக உள்ளவர்களுக்கும் அப்படியில்லாதவர்களுக்கு மிடையிலானதாகும். ஒரு உறுப்பினராக இருந்தால் ஒருவர் சுனாமி நிவாரணப் பணத்தை பெற்றுக் கொள்ள முடியும். அதிலுள்ள அபாயம், உதவியை இவ்வாறு மட்டுப்படுத்துவதால், ஏழைகளிலும் ஏழைகள் சிறிய உதவியைத்தானும் பெற்றுக்கொள்ள முடியாத நிலையை ஏற்படுத்துவதாகும். இந்த வழியில் கிராமத்தில் CBO அதிகாரமுள்ளதாக இருக்கிறது. அது உறுப்பினர்களின் அதிகாரத்தை பேணுகிறது.

ஒரு நிறுவனத்தின் அமைப்பில் பல தரங்கள் உள்ளன. தலைமைக் காரியாலயம், கள அலுவலகம், மற்றும் பங்காளி நிறுவனங்கள் இன்றைய இலங்கையில் உதவியை ஒழுங்குபடுத்துவதற்கு ஏற்றுக் கொள்ளப்பட்ட முறையாகும். இந்த தரங்கள் அந்நிறுவனத்தை பயன்படுத்துகின்றன. ஆயினும் நாங்கள் இங்கே சுட்டிக்காட்டியது போல் இந்த அமைப்பு அறிவை தானாக நிறுவனத்தின் பல்வேறு தரங்களுக்கிடையே பரிவர்த்தனை செய்யவில்லை. அறிவு CBO விலிருந்து பிரதான அலுவலகத்துக்கும் CBOவுக்கும் பயணிக்கவே இல்லை. நிறுவனத்தின் பலதரங்களில் உருவாகும் அறிவையும் கருத்துக்களையும் இணைப்பதே முக்கிய குறிக் கோளாகும். இது பால் வேறுபாட்டின் மைய நீரோட்டத்தை திறன்மிக்கதாக்கி வேலையை வலுவுடையதாக்குகிறது. மனிதாபிமான, அபிவிருத்தி பணிகளோடு இணைந்த உள்ளூர் உலக அறிவின் அடிப்படையில் தந்திரோபாய மொன்றையும் உருவாக்கிக் கொள்ளல் அவசியமாகும். பல்வேறு தரங்களுக்கிடையே தொடர்பாடலை ஏற்படுத்தி பல்வேறு அறிவையும் கலந்துருவாக்க இணைப்பாளராக செயல்படுமாறு NGOவின் கள அலு

வலகத்தை நாங்கள் பரிந்துரைக்கிறோம். ஒரு அயன் மகரந்த சேர்க்கையில் நிகழ்வது போல் இந்த பல்வேறு தொகுதி அறிவும் இருப்பதால் புதிய அறிவு பிறக்கும். இதற்கு நிறுவனம் பன்முகத் தன்மை, நெகிழ்ச்சி தன்மை. வெளிப்படை தன்மை கொண்டதாக இருத்தல் அவசியமாகும். அது மாவட்ட மட்டத்தில் தீர்மானம் எடுக்க கூடியதாகவும் பன்முகத்தன்மைக்கு முன்னுரிமை கொடுப்பதாகவும் இருத்தலும் வேண்டும். இது அந்நிறுவனத்தின் அபிவிருத்தி வாய்ப்புக்கு உள்ளூர் குரலை அதிகம் உணர்த்துகிறது.

**பின்னுரை**

பலவந்த குடியகல்வு (Forced Migration) பற்றிய இந்த திட்டம் NTNU என்னும் ஆய்வுக்குழுவால் மேற்கொள்ளப்பட்டதாகும். இக்குழு 1995ல் ஸ்தாபிக்கப்பட்டது. இந்தக் குழுவினர் பல்வேறு நிலைமைகளில் பலவந்த குடியகல்வு பற்றி ஆய்வு செய்கின்றனர். இக்குழுவினரது ஆய்வு நீண்ட காலம் நடைபெற்று வருவதாகும். இலங்கையில் நீண்ட காலமாக இது பல ஆய்வுகளை நடத்தி வந்துள்ளது. (1970க்களில் இக்குழுவின் சார்பில் தனிப்பட்ட உறுப்பினர்கள் ஆய்வுகளைச் செய்தனர்). இக்குழு செயலாளியை முதன்மைப்படுத்தும் (Actor Oriented) ஆய்வுகளை செய்வதில் அக்கறை காட்டுகிறது. 2004 சுனாமிக்கு பின்னர் வடக்கு NGO வுடன் இணைந்து ஒரு பங்காளியாக இவ்வாய்வுக்குழு செயற்படுகிறது. அனர்த்த முகாமைத்துவம் மற்றும் ஆற்றல் மேம்பாடு பற்றி புதிய அறிவை உருவாக்குதலே இதன் நோக்கமாகும்.

## Endnotes

[1] Oxfam International, "Gender and Tsunami," Oxfam briefing note, March 2005, http://www.oxfamamerica.org/newsandpublications/publications/briefing_papers/briefing_note.2005-03-30.6547801151/bn_tsunami_gender033005.pdf.

[2] Oxfam International, Ibid.; N. de Mel and K. Ruwanpura, *Gendering the Tsunami: Women's Experiences from Sri Lanka*, Colombo: International Centre for Ethnic Studies, 2006; S. Emmanuel and S. Maunaguru, eds, "Women Responding to Disasters, Challenges and Experiences from South Asia," Batticaloa: Suriya Women's Development Centre, 2007; Tressie Leitan, "Women, Local Government and the Tsunami," 2009 Social Scientists' Association..

[3] S. Baden and A.M. Goetz, "Who Needs [Sex] When You Can Have [Gender], in C. Jackson and R. Pearson, eds, *Feminist Visions of Development. Gender Analysis and Policy*, London: Routledge, 1998, 19-38.; S. Chant and M.C. Gutmann, "'Men-streaming' Gender? Questions for Gender and Development Policy in the Twenty-first Century," *Progress in Development Studies*, 2 (4), 2002, 269-82.; R. Subrahmanian, "Making Sense of Gender in Shifting Institutional Contexts: Some Reflections on Gender Mainstreaming, in A. Cornwall, E. Harrison, and A. Whitehead, eds, *Feminisms in Development. Contradictions, Contestations & Challenges*, London: Zed Books, 2007, 112-21.

[4] C. Moser, *Gender Planning and Development: Theory, Practice and Training*, New York and London: Routledge, 1993.

This publication is supported by Women Defining Peace (WDP)

WUSC EUMC COWATER INTERNATIONAL INC. MATCH INTERNATIONAL

**Women Defining Peace (WDP) is a project funded by the Canadian International Development Agency (CIDA) and implemented by a consortium of World University Service of Canada (WUSC), Cowater International and Match International Centre.**

Canadian International Development Agency

Agence canadienne de développement international

ISBN 978-955-1772-80-2

9 789551 772802

Printed by Kumaran Press (Pvt) Ltd.